இலங்கைப் பாராளுமன்றம்
வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாகவுள்ள **கீழ் குறிப்பிட்ட** பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2026.11.16** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், "**பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே**" எனும் முகவரிக்கு **பதிவுத் தபாலில் மாத்திரம்** அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

1. கனிஷ்ட உதவி நூலகர் பதவி (வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)

1.1 சம்பள அளவுத்திட்டம்

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 54,560- 3x680 / 10x800/ 4x1,190 - 69,360/-ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 96,000.00 ஆகும்.)

1.2 வயதெல்லை

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.3 தகைமைகள்:

1.3.1 **கல்வித் தகைமை:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தொழில்சார் தகைமை: நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமாவின் முதல் நிலை யினைப் பூர்த்தி செய்திருத்தல்.
(நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் பட்டம் அமைந்திருந்தால், தொழில்சார் தகைமை கட்டாயமல்ல.)

அத்துடன்

அனுபவம்: மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், பொது நூலகமொன்றில்/பாராளுமன்ற நூலகத்தில் நூலக உதவியாளராக மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

1.3.2 **கல்வித் தகைமை:** க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு (04) பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) / மூன்று(03) பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தொழில்சார் தகைமை: நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமாவின் II ஆம் பகுதியினைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

அனுபவம்: மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், பொது நூலகமொன்றில்/பாராளுமன்ற நூலகத்தில் நூலக உதவியாளராக ஐந்து (05) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

அல்லது

1.3.3 **கல்வித் தகைமை:** க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தொழில்சார் தகைமை: நூலக மற்றும் தகவல் விஞ்ஞான டிப்ளோமாவின் III மட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

அனுபவம்: மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், அரச நூலகமொன்றில்/பாராளுமன்ற நூலகத்தில் நூலக உதவியாளராக ஏழு (07) வருட அனுபவம் பெற்றிருத்தல்.

1.4 ஆட்சேர்ப்பு முறை

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை திறன்களின் மூலமாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

1.5 பரீட்சை நடைமுறை

1.5.1 **எழுத்துமூலப் பரீட்சை**: தொழிலின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவும் புரிதலும் பரீட்சிக்கப்படுவதோடு இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

1.5.2 **நேர்முகப் பரீட்சை:** பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

1.5.3 எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இதன்போது பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

	அளவுகோல்கள்
i.	மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
ii.	கணினி அறிவு
iii.	தொழில் அனுபவம்
iv.	தொடர்பாடல் திறன்கள் மற்றும் மொழித் தேர்ச்சி
v.	நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள்

2. தளபாட மினுக்குநர் (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)

2.1 சம்பள அளவுத்திட்டம்

2025.03.25ஆந் திகதிய 04/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் Iஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240 - 9 x 540 / 10 x 590 / 3x680 – 60,040/- ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 87,000/- ஆகும்).

2.2 வயதெல்லை

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3 தகைமைகள்:

2.3.1 **கல்வி :** கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரணத் தர) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழிக்குத் திறமைச் சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

தொழில்சார்:- தச்சுவேலை (தளபாட மினுக்குநர்) துறைசார்ந்த NVQ III சான்றிதழைப் பெற்றிருத்தல்

அத்துடன்

அனுபவம்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவமொன்றில் தளபாடம் மினுக்குதல் துறைசார்ந்த பதவி ஒன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

அல்லது

2.3.2 **கல்வி :** கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரணத் தர) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழிக்குத் திறமைச் சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு சாதாரண சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

அனுபவம்:- ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவமொன்றில் தளபாடம் மினுக்குதல் துறைசார்ந்த பதவி ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2.4 ஆட்சேர்ப்பு முறை: தளபாட மினுக்குநர் துறையில் உரிய திறன்கள் பரீட்சிக்கப்படும்.

2.4.1 **தொழில்சார் பரீட்சை**

2.4.2 **நேர்முகப் பரீட்சை :** தொழில்சார் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது கீழ்க் காணும் அளவுகோல்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

	அளவுகோல்கள்
i.	மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
ii.	விடய அறிவு
iii.	அனுபவம்
iv.	ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள்

3. உணவு, பான உதவியாளர் (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 08)

3.1 சம்பள அளவுத்திட்டம்:

2025.03.25ஆந் திகதிய 04/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் Iஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 47,240-9x 540/10x 590/3 x 680- 60,040 /- (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் ரூ. 90,000.00 ஆகும்).

3.2 கல்வித் தகைமைகள்:

கல்விப் பொதுத் தராதர சான்றிதழ் பத்திரங்கள் (சாதாரணத் தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கு சாதாரணச் சித்தியும் உள்ளடங்கலாக

இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

3.3 தொழில் தகைமைகள்:

இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (SLITHM) / தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA)/இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை (VTA) அல்லது அதனையொத்த தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருடத்திற்கும் குறையாத கற்கைநெறிக் காலத்தைக் கொண்ட அடிப்படை உணவகச் சேவைகள் கற்கை நெறியை / உணவு, பான சேவைகளுக்கான கற்கை நெறி ஒன்றைப் பயின்று அதனை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

3.4 அனுபவம்:

மேலே (3.2) மற்றும் (3.3) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பூர்த்தி செய்த பின்னர், நட்சத்திர ஹோட்டல் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உணவகப் பணியாளர் / உணவு, பான உதவியாளர் பதவியில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3.5 வயதெல்லை:

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.6 ஆட்சேர்ப்பு முறை:

தொழில்சார் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

3.6.1 தொழில்சார் பரீட்சை

மேற்படி பதவிக்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இப்பரீட்சையில் உணவகச் சேவைகளில் விண்ணப்பதாரர்கள் கொண்டுள்ள திறன்கள் மதிப்பீடு செய்யப்படும். இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

3.6.2 நேர்முகப் பரீட்சை

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கீழ்க் காணும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். இதில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

	விடயப் பரப்பு
I	மேலதிகக் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்
II	விடய அறிவு
III	மேலதிக அனுபவம்
IV	ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள்

4 சேவைகளின் நியதிகளும் நிபந்தனைகளும்

4.1 இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரச சேவையிலோ/மாகாண அரச சேவையிலோ ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

4.2 நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

4.3 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

4.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் மற்றும் அனாதைகள் / தபுதரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

4.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

4.6 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

6. அரச/மாகாண அரச சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

8. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் (தற்போது அரச/மாகாண அரச சேவையில் சேவை செய்பவராயின்) நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2026 ஒற்றோபர் மாதம் ..... ஆம் திகதி.